## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| MCOP.No. 4/2019 | Date : 03.07.2026 | PW 1 |
| --- | --- | --- |
| Name: விஜயகுமார் | த/பெ. மாதுபிள்ளை | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சிம்ஸ் செல்லம் மருத்துவமனையில் 17.07.2017 யில் விடுவிக்கப்பட்ட பிறகு வேறு எந்த வித மருத்துவ பரிசோதனையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனம் TN 52 X 7292 என்ற ஸ்கூட்டி வாகனம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் என்னுடைய ஒட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் எனது அப்பாவுடையது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாததால் மேச்சேரி காவல்நிலையத்தில் நான் ஓட்டி சென்ற வாகனம் சிறைப்பிடித்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.13 மருத்துவ பில்களில் மொத்த பில்கள் எத்தனை எவ்வளவு தொகை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நஷ்டஈடு கணக்கிடும்போது என்னுடைய அஜாக்ரதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/–விஜயகுமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு
சார்பு நீதிபதி,
மேட்டூர்.